# 10-ஆம் வகுப்பு – தமிழ் – இயல்-1 ( அன்னை மொழியே )

---

**வினா எண் (1 முதல் 15) பலவுள் தெரிக-**

**1. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெருங் கலங்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**2. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது**

அ)இலையும் சருகும் ஆ)தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும்**

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

**4. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது – தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே**

அ)பாடிய : கேட்டவர் ஆ)பாடல் : பாடிய இ)கேட்டவர் : பாடிய ஈ)பாடல் : கேட்டவர்

**5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிறு வகை**

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**6. உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம், உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகின்றோம் - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**7. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

LIVEWORKSHEETS

அ)கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ)கடல் நீர் குளிர்ச்சியடைதல் இ)கடல் நீர் ஒலித்தல் ஈ)கடல்நீர் கொந்தளித்தல்

**8. பெரியமீசை சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**

அ).பண்புத்தொகை ஆ).உவமைத்தொகை இ).அன்மொழித்தொகை ஈ).உம்மைத்தொகை

**9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

**அ) கொண்டல் - 1. மேற்கு ஆ) கோடை - 2. தெற்கு**

**இ) வாடை - 3. கிழக்கு ஈ) தென்றல் - 4. வடக்கு**

அ)1, 2, 3, 4 ஆ)3, 1, 4, 2 இ)4, 3, 2, 1 ஈ)3, 4, 1, 2

**10. பின்வருவனவற்றுள் முறையான தொடர்**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

LIVEWORKSHEETS